உ
சிவமயம்



யாழ்ப்பாணம், கல்லியம்காட்டினை பிறப்பிடமாகவும்
பளை வண்ணான் கேணியினை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் செல்லத்துரை கந்தசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவேந்தல்

24.05.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் இதயத்தில் தெய்வமாக
என்றும் நிலைத்து நிற்கும்
இல்லத்தில் ஒளிவிளக்கு
கள்ளியங்காட்டைப்
பிறப்பிடமாகவும் பளை
வண்ணான் கேணியை
வதிவிடமாகவும் கொண்ட
அமரர் செல்லத்துரை கந்தசாமி
அவர்களின் பாத தாமரைகளுக்கு
அவரின் நினைவேந்தலாக
இச் சிறு நூலைச் சமர்ப்பணம்
செய்கின்றோம்



குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



மலர்வு
10.08.1932

உதிர்வு
24.04.2014

அமரர்

# செல்லத்துரை கந்தசாமி

## திதி வெண்பா

ஆண்டு ஜய வருடம் ஆகும் உயர் சித்திரையில்
பூண்டதேய்பிறை காண் தசமிதனில் - நீண்ட புகழ்
கந்தசாமிப் பேரான் கவின் தேகம் இங்கு விட்டு
சங்கரனில் தாள் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளை கைம்மட மானி
பங்கையற் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூத நாயகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவாயாவது மிதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சால
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலா கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

உம்பர் தருத்தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் உயர்திரு செல்லத்துரை கந்தசாமி அவர்கள் வழிபாடு செய்த தெய்வங்களை பரவி வேண்டுதல் செய்து பாடிய பாமாலை**

**வெண்பா**

ஆண்டு இரண்டாயிரத்து பதினான்கு சித்திரையில்
சேர்ந்த இருபத்து நாலாம் நாள் - பிற்பகலாம்
இரண்டு பதினைந்து இசை நேரம் கந்தசாமி
இணைந்தான் சிவ பதவியே.

வணங்கு தலம்மீது வாழ்த்தி கவிபுனைய
இணங்கு கர மைந்து இபமுகவா - மனந்தன்னில்
வந்து நிறைவாய் வரந்தருவாய் வனைபாடல்
சிந்தைக்குள்ளாக செறி.

## பளை வண்ணன் கேணி திராய் கரைப்பிள்ளையாரை வேண்டிப்பாடியது

**சந்தப்பா**

முன்னைக்கும் முன்னவனே மூத்தவிநாயகனே
பின்னங்கள் போக்கும் பெரும் பொருளே - என்னவனே
வன்னப் பதிவிட்டு வரு கந்தசாமியனை
உன்னடி சேர் உயர்த்திவிடு.

**விருத்தம்**

கேணிக்கரையில் திகழ் திராய்க் கணித்தாக
காணிக்குள் வைகும் கணநாத காவலனே
கோணிக் குறுகி கோலவுடல் தான் கிடத்தி
பாணி குவித்து பதம் பணிய எண்ணி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக் கனிவான கந்தசாமி கண்ணியனை
மோனத்தைவிட்டு முன்வந்து கை கொடுத்து
மானத்து ஏற்றி மத கரியே உன்பதத்து
கானத் தருள் கூட்டி கற்பகமே காப்பாயே.

## கல்வியம் காடு வைரவப் பெருமானை நினைந்து வேண்டியது

சூலம் கரம் தாங்கி சுணங்கன் முதுகேறி
ஆலம் குடித்த அமலன் அருள் வடிவாய்
சீலம் மிகுந்த சீர் கல்வியம் காட்டில்
மூல முதற் பொருளே முழுமுதலே வைரவரே
காலம் கொடுத்த வயதும் கடு நோயும்
சால வருத்த தக்க துணை(வி) மக்கள் விட்டு
கோலம் சிறுத்து கொண்ட பிணி மூப் போடு
பாலன் வருகின்றான் பதத்தணைப்பாய் பரம் பொருளே.

## புலோப்பளை அறத்தி கண்ணகி அம்மனை நினைந்து வேண்டிப் பாடியது

கோவலன் கதை பாட குடாரப்பில் உள்ளாரை
கூட்டி உன் வாசல் வைத்து
கொண்டாடி மகிழ் வேலுப்பிள்ளையின் பணி கண்டு
குளிர்ந்திடும் கோதை தாயே
காவலன் வாழ்ந்திட்ட கவின் பளை மேவியே
காண்பரிய காட்சி காட்டி
காத்துமே அறத்தியின் கண்ணகித் தெய்வமே
கடவுளாய் கண்ட தாயே
நாவலர் புகழவே நவிலும் உன் கதையினை
நாமிருவர் சேர்ந்து பாட
நன்மைகள் காட்டியே நலி நோய்கள் மாற்றியே
நடமிடும் நல நங்கையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் நாவுறும் பத்தினித் தெய்வமே
பதியுற்ற கந்தசாமி
பதம் சேர வருகின்றான் பாவையே முன்வந்து
பரலோகம் காட்டியருளே.

## பளை இரட்டைக்கேணி அம்மனை வேண்டிப் பாடியது

பல கேணி பெயர் கூடும் பதியான பளையிலே
பாவை நீ கோயில் கொண்டு
பரவினோர் பணியெலாம் பரிந்து அருள் கூட்டிடும்
பத்தினியான உமையே
இருகேணி கொண்டிடும் இடமானதலமதில்
இமில் ஏறு இடப மீதில்
ஏறிடும் எந்தையை இடபாகம் கொண்டுமே
இறைவியாய் உற்ற தாயே
குறைவிலா செல்வமும் கூட்டிடும் ஞானமும்
கொடுத்திடும் குல மாமணி
குன்றாடு குமரனாம் கோல வேல் முருகனை
குழவியாய் கொண்ட மானே
நிறை வாழ்வு நீக்கியே நின்பாதம் சேரவே
நிகரன்பன் கந்தசாமி
நின்னை துதிக்கவே நேர்ந்திடும் தமியனை
நிர்மலை நினைந்து கூட்டே.

## பளை வண்ணான்கேணி வைரவப் பெருமானை நினைந்து பாடியது

கறுத்தானை கார் சூல பாணியை
கரிய நாயின்
முறத்தானை முகிழ் வண்ணான் கேணியின்
முதல்வன் தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறத்தானை சேவிக்க சேர் கந்தசாமியாம்
சிறியோன் தன்னை
மறக்காமல் மடிவைத்து மாற்றியிடு பவநோயை
மதி சூடி மகிழ் தேவனே

## நாகர் கோவில் நாக தம்பிரானை வேண்டிப் பாடியது

பாம்புத் தனித் தெய்வம் பதியதாய் கண்டிடும்
பணி நாகர் கோவில் தன்னில்
பணிகளின் கூட்டமாய் பக்கமாய் எங்குமாய்
பரவிடும் நாக நாதா
கூம்பிலே உற்றவா குலமாக விரிந்தவா
குலைந்தோட நடு நின்றவா
கும்பிட்டு வெள்ளையன் கொடு செயல் மாற்றியே
கோயிலில் குடி கொண்டவா
காம்பிட்ட கம்பனின் சீமாவில் மேவியே
களி கோயில் உட் புகுந்தாய்
கனவிலே தட்டானின் உருவதாய் நாகமாய்
கரு அத்தி விழுதாடினாய்
தேம்பிடும் சிந்தையன் செய்வகை தெரியலன்
சின்னவன் கந்தசாமி
தேடி உன் பாதத்தை ஓடியே வருகின்றான்
தேவ உன் படத்தில் வைப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் செல்லத்துரை கந்தசாமி(முன்னாள் நடத்துநர் இ.போ.ச) அவர்களின் வாழ்க்கை வரலாறு

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.''

வள்ளுவன் வாக்குக்கு அமைய வாழ்ந்தவர் அமரர் செல்லத்துரை கந்தசாமி.

வடபுலத்தின் தலைநகராம் யாழ் மண்ணில் நல்லூரான் பதியொட்டிய கல்வியங்காட்டில் உயர் சைவ வேளாண் குலத்தில் ஏக புத்திரனாக செல்லத்துரை பொன்னம்மா தம்பதியினருக்கு 1932.08.10 ஆம் நாள் மண்ணில் அவதரித்தார். அவரைப் பெற்றோர் அன்போடு அரவணைத்து பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வந்தனர். பாடசாலைப் பருவம் அடைந்ததும் யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்றுத் தேறினார். இவரது இளமைப் பருவத்தைக் கண்ணுற்ற பெற்றோர் இலங்கைப் போக்குவரத்துச் சேவையில் நடத்துனராகத் தெரிவு செய்வதற்கு உதவி செய்தனர். இதன் பயனாக அவர் மன்னார் சாலையில் கடமையாற்றினார். இவரது புன் சிரிப்பும் சினங் கொள்ளாது பேசும் பேச்சும் மக்களிடையே நன் மதிப்பை வளர்த்தது.

காலங்கள் உருண்டோட இவரது வாலிப வாழ்க்கையில் அக்கறை கொண்ட பெற்றோர் பச்சிலைப்பள்ளியில் பளைக் கிராமத்தின் முல்லையடிப் பிரிவில் தன்னலமற்ற சேவையாளனும் உயர் சைவ வேளாண் குலக் கொழுந்துமான அமரர் சுப்பர் அன்னப்பிள்ளை தம்பதியினருக்கு ஆறாவது மகளான சரஸ்வதியை (பவளம்) மணம் பேசினர். அழகும், இளமையும் அன்றலர்ந்த தாமரை போல் முகப்பொலிவும் கொண்ட பெயருக்கே உரித்தான சரஸ்வதியை மனமுடிக்க வரனும் சம்மதித்தார். திருமணமோ கோலாகலமாக தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயத்தில் 1959 ஆம் ஆண்டு ஆவணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24ல் மங்கல நாண்பூண்டு மணமாலை அணிந்து உற்றோர், பெற்றோர் வாழ்த்த இன்னிசை முழங்க இனிதே நடைபெற்றது.

இல்லறமே நல்லறமாக வாழ்ந்த தம்பதியினர் மூத்தமகளான பவானியைப் பெற்றெடுத்து இறுதிவரை தங்களுக்கு உதவியாக வைத்திருந்தனர். அதை அடுத்து மூத்த ஆண்மகனான சுதாகரனைப் பெற்றெடுத்து கல்வி கற்பித்து வெளிநாட்டுக்கு அனுப்பி திரும்ப அவரை அழைத்து நாகர் கோவிலைச் சேர்ந்த இரத்தினம் நாகேஸ்வரி தம்பதியினரின் புத்திரியான ரவிக்குமாரியை (நந்தினி) திருமணம் முடித்து வைத்து தர்மிலி, கஷ்மீரா, தாறோஜிதன் ஆகிய பேரப்பிள்ளைகளைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தார். அடுத்து மூன்றாவது மகனான இளந்திரையனைப் பெற்றெடுத்து அவருக்கு திருமண வயது எட்டியதும் எழுது மட்டுவாளைச் சேர்ந்த அழகதுரை சரஸ்வதி தம்பதியினரின் மகளான சுதாஜினியை மணம் முடித்து பிரவிசன், சங்கவி ஆகிய பேரப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

அடுத்து ஆண் மகனான அகிலனைப் பெற்றெடுத்து கல்வி கற்பித்து குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக கனடா நாட்டுக்கு அனுப்பி வைத்தார். அடுத்த அருமை மகளான நளினியைப் பெற்றெடுத்து கல்வி கற்பித்து மணப்பருவம் அடைந்ததும் துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த துரைராஜா பாக்கியம் தம்பதியினரின் ஏக புத்திரனான இலண்டனில் தொழில் புரியும் கஜேந்திரனுக்கு திருமணம் முடித்து பிரதீஸ், சஞ்ஞனா ஆகிய பேரப்பிள்ளைக் கண்டு மகிழ்ந்தார்.

ஆறாவது மகனான நந்தகுமாரைப் பெற்றெடுத்து கல்வி கற்பித்து நல்வழிப்படுத்தி நாட்டுநிலமை காரணமாக சுவிஸ் நாட்டுக்கு அனுப்பி வைத்தார். இவர் திருமண வயதை எட்டிய போது யாழ்ப்பாணம் கச்சேரியில் வசிக்கும் பத்மநாதன் இந்திராணி தம்பதியினரின் ஏக புத்திரியான பாமதியை திருமணம் முடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் இல்லறப் பயனாக நின்தியா, விதுணன் ஆகிய பேரப்பிள்ளைகளைக் கண்டு உள்ளம் பூரித்தார்.

தனது கடைக்குட்டி மகனான பகிரதனைப் பெற்றெடுத்து அன்போடும் பண்போடும் நல்வழிப்படுத்தி தொழில் புரியும் காலத்தில் இலண்டனுக்கு அனுப்பி வைத்தார். இவரும் திருமணப் பருவம் அடைந்ததும் சாவகச்சேரி மட்டுவில் பிரதேசத்தில் இருந்த பத்மநாதன் கனகாம்பிகை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியான தேனுகாவை மணம் முடித்து வைத்து அதன் பயனாக ஷயனி, கிஷானி ஆகிய பேரப்பிள்ளைகளைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தார்.

ஆன்மீகத்தில் அக்கறை உள்ள அன்னார் தினமும் நல்லூரானைத் தரிசிக்கும் பழக்கம் உடையவர். இவ்வாறு வாழ்ந்த காலத்தில் 2010 இல் புகுந்த வீடான வண்ணாங்கேனியில் உள்ள தனது விட்டிற்குச் சென்று இறுதிவரை வசித்து வந்தார். மனைவி மகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து வரும் வேளையில் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மகிழ்வுடன் வந்து செல்லும் போது அகமிக மகிழ்வார். இன்புற்று வாழ்ந்து வரும் வேளையில் கொடிய நோயான புற்றுநோய் பீடித்ததை அறிந்த மனைவி வெளிநாட்டு மக்களுக்கு தெரிவித்து அவர்கள் இலண்டன், சுவிஸ் ஆகிய இடங்களிலிருந்து ஓடோடி வந்து யாழ் வைத்தியசாலையில் வைத்திய கலாநிதி திரு ரவிராஜ் அவர்களினால் சத்திரசிகிச்சை செய்து அதன் பயனாகவும் வைத்தியசாலை ஏனைய உத்தியோகத்தரின் உதவியினாலும் ஒரு வருடம் சந்தோஷமாக வாழ்ந்தார். அதன் பின் மகள் நளினியும் பேரப்பிள்ளை சஞ்ஞனாவும் வந்து ஆறுதல் கூறி மகிழ்ச்சியடைய வைத்து மீண்டும் இலண்டன் சென்றனர்.

அவர்கள் போய் சிறிது காலத்தின் பின் பிரிவுத் துயர்வாட்டியதோ காலன் கவர்ந்தானோ யார் அறிவார் திரும்பவும் யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு 3ம் நாளே அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையாள் வேதனையடைவாள் என்றெண்ணி வீடு சென்று வரும்படி அன்பு வார்த்தை கூறி அனுப்பிவிட்டு ஆண்டவன் திருவடி நிழலை அடைந்துவிட்டார். அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்திற்கும் ஊர் மக்களுக்கும், உறவினர்களுக்கும் பேரிழப்பாகும். மக்களுக்கு அப்பா இல்லையே என்ற கவலை மருமக்களுக்கு மாமா இல்லையே என்ற கவலை, பேரப்பிள்ளைகளுக்கு தாத்தா இல்லையே என்ற கவலை. ஊரவர்க்கு உதவும் கரம் இல்லையே என்ற கவலை எல்லாம் அவன் செயல்.

''கொடுத்தவனே எடுத்துக்கொண்டான்

''பிறப்புண்டேல் இறப்புண்டு'' என்று எம் மனங்களைச் சாந்திப்படுத்துவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பாக்கள்

## மனைவி புலம்பல்

என் அருமை நாயகமே என் இறையே என் உயிரே
உன்னைப் பிரிந்து நான் ஒரு போதும் உற்ற தில்லை
கண்ணின் மணி போல காத்தேன் என் காவலனே
என்னைப் பிரிந்து செல்ல எப்படித்தான் எண்ணியதோ.

அன்னம் குறைவில்லை ஆடை குறைவில்லை ஆதியுள்ள
சொர்ணம் குறைவில்லை தேவி தன்னாலோர் துயரும் இல்லை
என்ன குறை நான் செய்தேன் என்னை விடுத்தேகியதேன் - என்
முன்னம் வராயோ முதல்வா முடிந்தது என் வாழ்வு மன்றோ.

அக்கினி சாட்சியாக அமர்திரு பெரியோர் முன்பு
இக்கணம் முதலாய் என்றும் பிரிந்திடேன் என்ன செப்பி
தக்கதோர் மணம் செய்திட்டாய் தவித்திட என்னை விட்டு
புக்கதேன் விளம்பாய் ஐயா பூவை நான் என் செய்வேனே.

## மகன்மார் புலம்பல்

செல்லமாய் எமை வளர்த்தீர் சீர் தந்தீர் சிறப்புசெய்தீர்
நல்லமாய் நாம் வாழ நலம் செய்தீர் நம்மைக்காத்தீர்
எல்லாமே நாம் என்று இன்புற்றிருக்கையிலே
சொல்லாமல் எங்கு சென்றீர் துன்பம் தான் நீங்கிபோமோ.

அன்பு மழை பொழிந்து ஆதரவாய் சீராட்டி
துன்பெதுவும் ஆண்டாமல் சுற்றியே காவல் நின்று
இன்பம் எமக்காக்கி இடர் கொண்டு நோய்ப்பட்டு
சென்றீர் எமைவிடடு சேர்துன்பம் மாற்றுவமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள்மார் புலம்பல்

நிறைவான வாழ்க்கை நிலைத்துவிட தேடிவைத்து
முறையாக நாம் வாழ முற்றுமே செய்திழைத்து
குறை ஒன்றும் வைக்காது கோதாட்டி சீராட்டி
மறைவான எம்தலைவா மாறிடுமோ துன்பமது.

உற்ற துணை நீ உயிர் நீ உணர்வும் நீ
சுற்றமும் நீ தந்தையும் நீ எம் இனிய தோன்றலு நீ
கற்ற நிலை நீ காவியம் நீ எமைக் காத்த
நற்தவமே எங்குற்றாய் நம் முன்னே வராயோ.

இந்த உலகில் எமைவிடுத்த எம் இறையே
தந்தையே தாய் போல் தயவு புரிதன்மையரே
முந்தை நீர் சோராது முன்னவராய் நாம் நிலைக்க
சிந்தை செறி செய்கை சேய் நாம் மறப்போமோ.

## மருமக்கள் புலம்பல்

பண்பிற் கொரு உருவே பாசப்பிறப்பிடமே
அன்பிற் தனி வடிவே ஆதரவே எம் உறவே
இன்பில் எமை வைத்து எமை விட்டு நீர் செல்ல
துன்பம் எது தந்தோம் சொல்லாய் எம் மாமாவே.

கண்களது மூடியதால் கடும் துன்பம் எமக்குத்தான்
உங்களது சேவை உறுதியென நாம் கொண்டோம்
எங்களது சேவை இனி வேண்டா என விடுத்து
மங்கினையோ மாமாவே மாறிடுமோ மனத்துன்பம்.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

சின்னம் சிறார்கள் நாம் செய்த தொன்றும் தெரியவில்லை
அம்மா அழுகின்றார் ஆதலினால் எம் கண்ணீர்
தன்னால் வருகிறது தாத்தா தான் இல்லை என்று
சொன்னால் புரிகிறது சோகமாய் சொட்டிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா கடவுளிடம் தங்குதற்கு போய்விட்டார்
பேர்த்து வரமாட்டாரென பேசும் கதை தெரிகிறது
சேர்த்து விளையாட செல்வதற்கும் மனமில்லை
காத்து இருக்கின்றோம் காணுதற்கு தாத்தாவை.

## மைத்துனர் மைத்துனி புலம்பல்

அத்தான் எனச் சொன்னால் அகங்குழையும் அன்புருகும்
முத்தான உம் பேச்சு முடிந்ததுவோ அத்தானே
கத்திக் கதறி அழ காலனது மூப்போடு நோய்காட்டி
சுத்தி கொடு சென்றானோ சொல்வாய் எம் மைத்துனரே.

## பெறாமக்கள் புலம்பல்

உங்களை எங்கள் உயர் தந்தை என்று உளத்தில் எண்ணி
எங்களுக்கான இடர் களைவாய் என எண்ணினமயாம்
பந்தம் ஒழிந்து உயிர் நீத்தனையே பலபேர் மதிக்க
வந்திடும் தெய்வ பெரியப்பாவே துயர் மாற்றுவமோ.

## உறவினர்கள் புலம்பல்

பொறுமைக் கணியான் பொறை கந்தசாமியென
நிறைமைத் தனியாக நின்னை நினைத்திருந்தோம்
திறைமைக்குரியானே சேர் மைந்தர் சுற்றம் விட்டு
மறைவுற்று போயினையோ மறப்போமோ உன் முகத்தை

## ஊரவர்கள் புலம்பல்

பேச்சைக் குறைத்து பெரும் செய்கையாளாகி
மூச்சுத்தான் போம் வரையும் முகமலர்ந்து பரிவாட்டி
நேச்சத்தான் கந்தசாமி நேரான் நிகரில்லான்
போய்ச் சேர்ந்தான் என நினைக்க பொங்குதையா துன்பநிலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

ஊதப் பறக்கும் பஞ்சது போல உயிர் அகன்றால்
காதற்ற ஊசியும் வாராது கண்டு கடை வழிக்கு
போதற்கு நல்ல அறந்தேடி வைத்து புவியின் மிசை
மாசற்ற சைவ முறைப்படி வாழுக மாநிலத்தீர்

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
        என மதில் எண்ணாது
வகையறியாமலே குற்றங்கள் குறைபேசி
        வாதுடன் சண்டையிட்டு
மாழ்வது வருமென்று மனதிலே நினையாது
        மாபாவியாக நின்று
மமதையில் நின்றலே மனதுக்கு நிறைவென
        மனம் போன போக்கில் ஓடி
தாழ்வோடு மூப்பு நரை தான்கூடி நோயுற்று
        தள்ளாடி தடுமாறியே
தாங்குதற் கெவரின்றி சங்கார சிவமென
        சாற்றிடும் சகத்துள்ளோரே
பாழ் நேரம் போக்காது பகர் சைவ நெறி நின்று
        பண்பாளராக வாழ்ந்து
பற்றிலார் உற்றார்கள் பரவிடும் தெய்வமாய்
        பகிர்ந்துண்டு பாரில் வாழ்வீர்.

வீடுவரை மனைவி
வீதிவரை பிள்ளை
காடுவரை சுற்றம்
கடைசி வரை யாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து (விருத்தம்)

(குடாநீரூரான் பாடிய கண்ணகியம்மன் காவியமாலை என்ற நூலிலிருந்து)

கற்பென்னும் கனலதனால் கயவர் தீய்த்து
        காவியத்து நாயகியாய் தெய்வமாகி
வற்றாப்பளை மேவி வடிவு காட்டி
        வணங்கு தலம் தோறும் வந்து தோன்றி
பற்று வெற்றி வேலனுக்கு பாடலூட்டி
        பத்தினியாய் பராபரையாய் பணிந்த அன்பர்க்கு
வற்றாத அருள் சுரக்கும் வாரியான
        வண்ணமயில் கண்ணகையை வணங்கி வாழ்வாம்

சுபம்

''குடம்பை தனித்தொழிய புள்பறந்தந்றே
உடம்போடுயிரிடை நட்பு'' - திருக்குறள்

**ஆக்கம் - குடாநீரூரான்**
**ம.ம.வி.வீதி, நெல்லியடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
1932
–
08
–
10



விண்ணில்
2014
–
04
–
24

## அமரர் செல்லத்துரை கந்தசாமி

### (முல்லையடி, பளை)

நேற்றுவரை நீரிபேசிய வரிகள்
காற்றுள்ளவரை கரையாது – எம்
ஊரின் உன்னத பயணத்தில் உம் தடம்
காரிருள் கைவிளக்கு போன்றதைய்யா?

பிறந்தார்க்கு இறப்புண்டு நிச்சயம் – ஆனால்
மறவாது இவ்வுலகம் உமை– என்றும்
மறையாது உம் நாமம் – நம் ஊரில்
கறையில்லா உங்கள் அன்பு
மறுபிறப்பிலும் கிடைத்திட வேண்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கிராம அபிவிருத்திச் சங்கம்
முல்லையடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு வினா விடை

01. முக்கனிகள் எவை? வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம்
02. சிறுவர்களுக்கு காணப்படும் பாற்பற்கள் எத்தனை? 20
03. மனித வலுவினால் இயங்கும் போக்குவரத்து சாதனம் எது? துவிச்சக்கர வண்டி (சைக்கிள்)
04. இலங்கைக்கு வடக்காக அண்மையிலுள்ள நாடு எது? இந்தியா
05. தூய நீரின் சுவை யாது? சுவையில்லை
06. இலங்கையில் வாழும் மக்களில் எந்த சமயத்தை பின்பற்றுபவர்கள் அதிகம்? பௌத்த மதம்
07. இலங்கையில் சீனித்தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது? கந்தளாய், ஹிங்குராணை, பெலவத்தை
08. பூரண நிலவுடைய நாளை எவ்வாறு அழைப்பர்? பௌர்ணமி (பூரணை)
09. சந்திரன் மறையும் நாளை எவ்வாறு அழைப்பர்? அமாவாசை
10. இயற்கை ஒளிமுதல் எது? சூரியன்
11. உணவை உறிஞ்சிக் குடிக்கும் பிராணிகள் எவை? நுளம்பு, வண்ணாத்துப்பூச்சி, பேன், தெள்ளு, தேனீ, உண்ணி
12. உணவைக் கொறித்து உண்ணும் விலங்குகள் எவை? எலி, அணில்
13. இலங்கையின் சுதந்திரதினம் ஒவ்வொரு வருடமும் எத்தினத்தில் கொண்டாடப்படும்?
    மாசி மாதம் 4ஆம் திகதி
14. இலங்கையின் மிகவும் நீண்ட ஆறு எது? மகாவலி கங்கை
15. இலவசக் கல்வியின் தந்தை யார்? C.W.W. கன்னங்கரா
16. இலங்கையின் முதற் பெண் பிரதமர்? சிறிமாவோ பண்டாரநாயக்கா
17. வெப்பநிலையை அளக்கப் பயன்படும் கருவி எது? வெப்பமானி
18. முஸ்லீம்களின் வேதநூல் எது? திருக்குர்ஆன்
19. நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட பெரிய நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்? கண்டம்
20. நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்? தீவு
21. பெரிய நீர்ப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்? சமுத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. நீருடன் கலக்காத ஒரு திரவப்பொருள் தருக? மண்ணெய், ஒயில், டீசல், பெற்றோல்
23. பறக்கும் பாலூட்டி எது? வௌவால்
24. வெளிச்சமான இடத்தில் ஒளி செல்வது தடைப்பட்டால் யாது உண்டாகும்? நிழல்
25. வேடிக்கையாகப் பேசி சிரிக்க வைப்பவரை எவ்வாறு அழைப்பர்? விகடகவி
26. செய்தித்தொடர்புச் சாதனங்கள் எவை?
வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, தொலைபேசி, இன்ரநெட்.
27. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்? அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல்
28. எரிதலுக்கும், சுவாசத்திற்கும் பயன்படும் பிரதான வாயு எது? ஒட்சிசன்
29. சமாதானப் பறவை எது? புறா
30. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது? பாக்கு நீரிணை
31. அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் எது? அகராதி
32. வியாபார நோக்கமில்லாது அன்பின் காரணமாக ஒருவருக்கு வழங்கப்படும் கொடை? அன்பளிப்பு
33. ஒருவர் தன்னைப் பற்றித் தானே எழுதும் நூல் யாது? சுயசரிதை
34. பின்வரும் ஆண்டுகளின் முடிவில் எடுக்கப்படும் விழா எவ்வாறு அழைக்கப்படும்?

25 – வெள்ளி விழா 50 – பொன்விழா 60 – வைரவிழா / மணிவிழா

80 – அமுதவிழா 75 – முத்து / பவளவிழா 100 – நூற்றாண்டு விழா

35. யாவர்க்கும் இல்லையென்றாது கொடுக்கும் தன்மையுள்ளவன் யார்? வள்ளல்
36. இலங்கையில் முதற் பிரதம மந்திரி யார்? டி.எஸ். சேனாநாயக்கா
37. சக்தியின் வடிவங்களைத் தருக? ஒலி, ஒளி, மின், வெப்பம், காந்தம்
38. சூரியனுக்கு மிக அண்மையிலுள்ள கோள் எது? புதன்
39. பூமி தன் அச்சில் ஒருமுறை சுற்றிவர எடுக்கும் நேரம் எவ்வளவு? 24 மணித்தியாலம்
40. இலங்கை எந்த ஆண்டில் சுதந்திரம் பெற்றது? 1948 (பெப்ரவரி 4ம் திகதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் பிதாவுடனும் எம்முடனும் பழகிய நல் அன்புடையோர்
அந்திக்கடன்கள் முடிப்பதற்கு சேர்ந்தார்கள் சொந்தக்
கடமையதாய் செய்தவர்கள் உறவினர்கள், தந்தையின்
நோயில், துயரில், மரணத்தில், மயானம் வரை வந்து
வழியனுப்பிவைத்தவர்கள், தந்தி, தபால், தொலைபேசி
செய்தியில் துயரத்து இணைந்தவர்கள் கண்ணீர்
அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோர், மலர் வளையம்
வைத்து அஞ்சலி செலுத்தியோர் மற்றும் நோயுற்ற
வேளையில் வைத்தியசாலையில் உதவிபுரிந்த
வைத்தியர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும்
இவர்களுடன் இவ் நினைவேந்தலை ஆக்கிய அன்பர்
குடாநீரூரானுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரண
கிரியைகளில் கலந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும்
இந்த வகையடங்காதேனையோர்க்கும் எம்முடைய
சிந்தை கனிந்த வணக்கமொடு நன்றியையும் நன்றி
மறவாது நாமுரைத்தோம் அமைதியுடன் பந்த
மொன்றின்றி பணிந்து

சாந்தி! சாந்தி! சாந்தி!



வண்ணான்கேணி
பளை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்



T.P-21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org